# என் தேவனாகிய கர்த்தர், என் இருளை வெளிச்சமாக்குவார். சங்கீதம் 18 : 28

**எழும்பி பிரகாசி**

கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதானமுண்டாவதாக! ஆமென்.

அநேக நேரங்களில் நமது வாழ்க்கையிலே இருண்டு போனது போல் உணருகிறோமல்லவா ? நாம் நம்பினவர்கள் நம்மை கைவிட்டு விட்டார்கள். உறவினர் துரோகம் செய்துவிட்டார்கள். எதிர்பார்த்திருந்த காரியத்தில் தோல்வி, குழந்தைச் செல்வம் இல்லாதபடியால் மற்றவர்களுடைய ஏளனம் ஒரு பக்கம், வியாபாரத்தில் நஷ்டம், எதைத் தொட்டாலும் தோல்வி, பாவ வாழ்க்கையில் வெற்றி இல்லை, கொஞ்சங்கூட சேமிக்க முடியவில்லை, வீண் செலவு, கடன்காரர் தொல்லை, சத்துருவினுடைய சரியான போராட்டம், மற்றவர்களுக்கு நம்மை பற்றிய பொறாமை, இரவிலோ தூக்கம் இல்லை, பகலிலோ நிம்மதி இல்லை!

**"போதும் ஆண்டவரே, என்னை எடுத்துக்கொள்ளும்"**

என்று சொல்கிறீர்களா ? வேண்டாம் இனிமேல் அப்படிச் சொல்லவேண்டாம்.

விசுவாச வார்த்தைகளை அறிக்கை செய்யுங்கள். 'என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்' – அல்லேலூயா! மீண்டும் மீண்டுமாக சொல்லுங்கள். உன் இருளை வெளிச்சமாக்க தேவனாகிய கர்த்தரால் மட்டுமே முடியும். ஏனெனில், வேதம் சொல்லுகிறது, இயேசு கிறிஸ்துவினாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. – என்பதாக. அல்லேலூயா! அநேக நேரங்களில் பாவ இருள், மரண இருள் நம்மை சூழ்ந்துகொள்ளும் பொழுது தேவனுடைய முகத்தை எட்டிப்பார்க்க முடியாமல் தவிக்கிறோம். அநேக நேரங்களில் பின் வாங்குகிறோம். இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள நம்பிக்கையே எடுபட்டு போய்விடுகிறது. தற்கொலை செய்துகொள்வது சாலச் சிறந்தது போல் தெரிகிறது.

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

அந்த வழி உனக்கு வேண்டாம். இதற்காகவா, இத்தனை நாளும் தேவனை நீ தரிசித்தாய், இதற்காகவா, நீ தேவனுக்காக உழைத்தாய், இதற்காகவா நீ ஜெபித்தாய், இதற்காகவா நீ கொடுத்தாய், சிந்தித்துப்பார்.

நீ எழும்பி பிரகாசிக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார்.

**மத்தேயு 6 : 23, லூக்கா 11 : 35 ல் இயேசு சொல்கிறார்.**

உன்னிலிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

**ஏசாயா 58 : 10 சொல்கிறது,**

இருளில் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும் – என்பதாக. அல்லேலூயா.

என் அன்பு சகோதரனே, சகோதரியே, உன் வாழ்க்கை எப்பேர்ப்பட்ட இருள் சூழ்ந்திருந்தாலும் கவலைப்படவேண்டாம். **எழும்பிப்பிரகாசி,** உன் ஒளி வந்தது. கர்த்தருடைய மகிமை உன் மேல் வந்தது. கர்த்தருடைய மகிமை உன் மேல் உதித்தது. ஆனாலும், உன் மேல் கர்த்தர் உதிப்பார் அவருடைய மகிமை உன் மேல் காணப்படும். உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்திற்கு ராஜாக்களும் வருவார்கள். சுற்றிலும் உன் கண்களை ஏறெடுத்துப்பார். அவர்கள் எல்லாரும் ஏகமாய் கூடி உன்னிடத்திற்கு வருகிறார்கள். உன் குமாரர் தூரத்திலிருந்தும், உன் குமாரத்திகள் பக்கத்திலிருந்தும் வளர்க்கப்படுவார்கள். அப்பொழுது நீ அதைக் கண்டு ஓடி வருவாய். உன் இருதயம் அதிசயப்பட்டு பூரிக்கும் உன் துக்க நாட்கள் முடிந்து போம்.

விசுவாச வார்த்தைகளை வாஞ்சையோடு ஏற்றுக்கொள்ளும் சகோதரனே, சகோதரியே, நம்பிக்கையோடே என் தேவனால் கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குமார் என்று சொல்லுங்கள். ஏனெனில் என் கடுங்கோபத்தினால் உன்னை அடித்தேன் ஆனாலும் என் கிருபையினால் உனக்கு இரங்கினேன் என்று கர்த்தர் சொல்கிறார். **ஏசாயா 60 : 10**

ஆதலால், இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய். **சங்கீதம் 91 : 6.** அல்லேலூயா.

அன்பு சகோதரனே, சகோதரியே, ஒரு முறை கல்வாரி சிலுவையை நோக்கிப்பார். " **இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்"** இயேசு சொல்கிறார், வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை என்பதாக. இந்த அன்புக்குரல் உங்கள் காதில் தொனிக்கவில்லையா ? இந்த இயேசுவை விட்டு, விட்டு எங்கே போகிறாய் ?

கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள் நம்மை பீறினார்.
அவரே நம்மை குணமாக்குவார். நம்மை அடித்தார்,
அவரே நம்முடைய காயங்களை கட்டுவார். அல்லேலூயா. **ஓசியா 6 : 1**

**எழும்பி பிரகாசி**

**உன் தேவனாகிய கர்த்தர், உன் இருளை வெளிச்சமாக்குவார்.**